நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மணப்பாறை.

முன்னிலை: திரு. இரா. அசோக்குமார் **B.Com, B.L .,**

நீதித்துறை நடுவர், மணப்பாறை,

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 09-ம் நாள் வியாழக்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்79/2024

(CNR NO.TNTP10-003864-2024)

**சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்**

.....

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | தமிழ்நாடு அரசு,<br>அதற்காக காவல் ஆய்வாளர்,<br>துவரங்குறிச்சி காவல் நிலையம்,<br>குற்ற எண்.84/2023 |
| குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள்: | சன்தீப்,<br>த/பெ. மானுவேல் அருள்ராஜ் |
| குற்றப்பிரிவு | U/s.279, 338, 304(A) IPC |
| வனையப்பட்டது | U/s.279, 338, 304(A) IPC |
| தீர்மானம் | முடிவாக இந்த வழக்கில் எதிரி சந்திப் என்பவர் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 279, 338, 304A ஆகியவற்றின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து இந்த நீதிமன்றம் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 255 (1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. மேலும் எதிரிக்கு பிணையாளர்கள்_வழங்கிய பிணை பத்திரத்தை ரத்து செய்யவும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. |

**குற்றம் சாட்டப்பட்டவர்கள் விபரம்**

| பெயர் | த.பெ. / க.பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|
| சன்தீப் | மானுவேல் அருள்ராஜ் | கிறித்துவர் | கூலி | 3/1898, தண்ணீர் ஊற்று, தங்கச்சிமடம், ராமேஷ்வரம், ராமநாதபுரம் மாவட்டம். | 33/ 2023 |

**தேதி விவரங்கள்:–**

| | | |
|---|---|---|
| குற்ற நிகழ்வு நாள் | : | 11.04.2023 |
| புகார் கொடுத்த நாள் | : | 12.04.2023 |
| எதிரியை கைது செய்த நாள் | : | 12.04.2023 |
| பிணை விடுவிப்பு | : | 12.04.202 (Bailed by Police) |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 09.04.2026 |
| விசாரணை முடிவு | : | 29.06.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | – |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 14.08.2023 |
| Date of Questioning | : | 02.04.2026 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | –– |

| | | |
|---|---|---|
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PW's Chief Cross<br><br>PW1 09.04.2026 09.04.2026<br>PW2 09.04.2026 09.04.2026<br>PW3 09.04.2026 09.04.2026<br>PW4 09.04.2026 09.04.2026<br>PW5 09.04.2026 09.04.2026<br>PW6 09.04.2026 09.04.2026<br>PW7 16.06.2026 16.06.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 23.06.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்தவிவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| கால தாமதத்திற்கான காரணம் | : | -- |

இவ்வழக்கானது 14.08.2024–ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 29.06.2026–ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **திரு. ஆனந்தகுமார் உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்,**எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. S. மார்டின்** அவர்களும், ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும்

சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரர் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 173 ன்படி தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் படி எழுந்த வழக்காகும்.

**2. குற்ற முறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 11.04.2023-ம் தேதியன்று இரவு சுமார் 08.30 மணியளவில் துவரங்குறிச்சி காவல் நிலைய சரகம் திருச்சி to மதுரை NH ரோட்டில் துவரங்குறிச்சி அரசு பஸ் டெப்போ அருகே உள்ள பிரிவு சாலை அருகில் சாட்சி 2 பழனிச்சாமி என்பவர் ஓட்டிய TN 59 K 2405 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் இவ்வழக்கின் வாதி ராசுவின் தம்பி சந்திரன் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு திருச்சி to மதுரை NH ரோட்டில் கிழக்கு பக்கம் இருந்து மேற்கு பக்கம் மதுரை to திருச்சி NH ரோட்டிற்கு செல்வதற்காக கடந்தபோது திருச்சி to மதுரை NH ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த TN 65 AM 5602 என்ற பதிவெண்கொண்ட Kia Sonet என்ற காரை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து பழனிச்சாமி ஓட்டிய இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்படுத்தியும், வாதியின் தம்பி சந்திரனுக்கு இறப்பும், பழனிச்சாமிக்கு கொடுங்காயத்தையும் ஏற்படுத்திய உமது குற்றச்செய்கையானது சட்டப்பிரிவு 279, 338, 304(A)IPC ன்படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக துவரங்குறிச்சி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3.வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளிடம் வினவல்:</u>**

குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல் U/S.**230 Bharatiya Nagarik Suraksha Sanhita 2023**(கு.வி.மு.ச பிரிவு 207)–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு எதிராக பிரிவு **263(1) Bharatiya Nagarik Suraksha Sanhita 2023–ன் (**கு.வி.மு.ச. பிரிவு 240(1))–ன் படி சட்டப்பிரிவு U/s.279, 338, 304(A) IPC–ன்படி குற்றச்சாட்டு வனையப்பட்டு, பிரிவு263(1) Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 (கு.வி.மு.ச.240(2)) பிரிவின் கீழ் எதிரியிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**<u>4. விசாரணை:–</u>**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :–</u>**

(5.1) அ.சா.1. திரு. இராசு தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்த சந்திரன் எனக்கு தம்பி என்றும் பட்டியல் சாட்சி 2 பழனிச்சாமி தகப்பனார் பெயர் சாத்தையா என்பவரை தெரியும் என்றும், அவர் பக்கத்து ஊர்க்காரர் என்றும், என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்

என்றும், மேற்படி புகாரை நான்தான் கொடுத்தேன் என்றும், சுமார் 3 வருடத்திற்கு முன்பு தேதி தற்போது ஞாபகமில்லை என்றும், மாலை சுமார் 08.30 மணியளவில் நாங்கள் வீட்டில் இருந்தோம் என்றும், சக்திவேல் என்பவர் எனக்கு போன் செய்து எனது தம்பி துவரங்குறிச்சி டிப்போ அருகில் விபத்து ஏற்பட்டதாகவும் அதில் எனது தம்பி சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார் என்றும், தகவல் அறிந்து சுமார் 10 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றும், சம்பவ இடத்தில் எனது தம்பி இறந்த நிலையில் இருந்தார் என்றும், அவருக்கு தலை, கால் உள்ளிட்ட பகுதிகளில் காயம் இருந்தது என்றும், துவரங்குறிச்சி சாலையும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாக சென்ற கார் தெற்கிலிருந்து வடக்காக வேலையை முடித்துவிட்டு எனது தம்பி இருசக்கரவாகனத்தில் சென்றபோது மோதி விபத்து ஏற்பட்டதாக தெரியவந்தது என்றும், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரிதான் அவரை நான் சம்பவ இடத்தில் சம்பவத்தன்று பார்த்தேன் என்றும், இது தொடர்பாக நான் புகார் அளித்தேன் என்றும், விபத்தில் மேற்படி இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்தபட்டியல் சாட்சி 2 பழனிச்சாமி என்பவருக்கும் காயம் ஏற்பட்டது என்றும், அவருக்கு காலில் அடிப்பட்டது என்றும், அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னிட்டு மணப்பாறை அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணையின்போது துவரங்குறிச்சி போலீசாருடன் இருந்து எனது தம்பியை அடையாளம் காட்டினேன் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2. திரு. பழனிச்சாமி தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்த சந்திரன் என்பவரை தெரியும் என்றும், நாங்கள் இருவரும் ஒன்றாக வேலை செய்து வந்தோம் என்றும், அ.சா.1 இராசு என்பவரை தெரியும் என்றும், சுமார் 3 வருடத்திற்கு முன்பு துவரங்குறிச்சிக்கு அருகில் உள்ள அதிகாரம் என்று

ஊர்திருவிழாவிற்கு டிரம்ஸ் அடிக்க 7 பேர் சென்றிருந்தோம் என்றும், வேலையை முடித்துவிட்டு நானும், சந்திரனும் இருசக்கரவாகனத்தில் திரும்பி வந்தோம் என்றும், அந்த வாகனத்தை நான் ஓட்டி வந்தேன் என்றும், சந்திரன் எனக்கு பின்னால் அமர்ந்து வந்தார் என்றும், மாலை சுமார் 07.00 மணியளவில் நாங்கள் துவரங்குறிச்சி டிப்போ அருகில் வந்து கொண்டிருந்தபோது திருச்சி சாலையில் மேற்கு பக்கமாக திருச்சியை நோக்கி சென்று கொண்டிருந்தோம் என்றும், அதே சாலையில் மதுரை நோக்கி வந்த கருப்பு கலர் கார் வேகமாவும், கண்ட்ரோல் இல்லாமல் வந்து எங்கள் வாகனத்தின்மீது மோதியது என்றும், என்னோடு வந்த சந்திரன் சம்பவ இடத்தில் விபத்தில் இறந்துபோய்விட்டார் என்றும், எனக்கு வலது காலிலும், தலையிலும், வலது கையிலும், இடுப்பு உள்ளிட்ட பகுதியில் இரத்த காயம் ஏற்பட்டது என்றும், விபத்தை ஏற்படுத்திய நபரை தெரியவில்லை என்றும், விபத்து ஏற்படுத்திய நபர் குறித்து எனக்கு படிப்பறிவு இல்லாததால் நான் விசாரிக்கவில்லை என்றும், விபத்தில் காயமடைந்த எனக்கு பின்னிட்டு என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை என்றும், காயமடைந்த என்னை துவரங்குறிச்சி, மணப்பாறை, திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு எனது காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றும், இதுவரை வேலைக்கு செல்ல முடியாமல் வீட்டில் இருந்து வருகிறேன் என்றும், போலீசார் விபத்து குறித்து 3 வருடத்திற்கு முன்பு விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3. திரு. சக்திவேல் தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்த சந்திரன் மற்றும் விபத்தில் காயமடைந்த பழனிச்சாமி ஆகியோர் எனக்கு பழக்கமானவர்கள் என்றும், அ.சா.1 இராசு என்பவரை தெரியும் என்றும், சுமார் 3 வருடத்திற்கு முன்பு துவரங்குறிச்சிக்கு அருகில் உள்ள அதிகாரம் என்று

ஊர்திருவிழாவிற்கு சென்றுகொண்டிருந்தேன் என்றும், மாலை சுமார் 07.00 மணியளவில் மதுரை – துவரங்குறிச்சி சாலையில் டிப்போ அருகில் நான் எக்ஸ்.எல் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அப்போது எங்களுக்கு எதிரே பழனிச்சாமி இருசக்கரவாகனத்தை ஓட்ட சந்திரன் என்பவர் பின்னால் அமர்ந்து வந்தார் என்றும், அவரது இருசக்கரவாகனத்தில் டிரம்செட் மற்றும் டிரஸ் வைத்திருந்த பேக்கை வைத்திருந்தார்கள் என்றும், இருசக்கரவாகனம் ரோட்டின் வெள்ளைக்கோட்டை தாண்டியபோது தெற்கிலிருந்து வடக்காக வந்து கொண்டிருந்தபோது அந்த கார் வடபுறத்திலிருந்து தெற்கு புறமாக வந்த கார் வேகமாக வந்து மோதியது என்றும், இருசக்கரவாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த சந்திரன் சம்பவ இடத்திலியே இறந்துவிட்டார் என்றும், இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்த பழனிச்சாமி பறந்து கீழே விழுந்தார் என்றும், அவருக்கு காலில் இரத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றும், விபத்தை பார்த்த நான் அக்கம், பக்கத்தினரை கத்தி கூப்பிட்டு காயமடைந்த நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தேன் என்றும், காரில் வந்தவர்கள் பதட்டமாக இருந்தார்கள் என்றும், ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் என்றும், காரில் அவரது மனைவி இருந்தார் என்றும், அவர்களையும் பாதுகாப்பாக வேறு வாகனத்தில் அனுப்பிவைத்தோம் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.4. திருமதி. முருகேஸ்வரி தனது சாட்சியத்தில் அவர் பக்கத்து ஊர்க்காரர் என்றும், அ.சா.1 இராசு எனது கொழுந்தனார் என்றும், சுமார் 3 வருடத்திற்கு முன்பு தேதி தற்போது ஞாபகமில்லை என்றும், மாலை சுமார் 08.30 மணியளவில் நாங்கள வீட்டில் இருந்தோம் என்றும், சக்திவேல் என்பவர் எனக்கு போன் செய்து எனது கணவர் துவரங்குறிச்சி டிப்போ அருகில் விபத்து ஏற்பட்டதாகவும் அதில் எனது கணவர் சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாக

தகவல் சொன்னார் என்றும், எனது கணவருக்கு அவருக்கு தலை, கால் உள்ளிட்ட பகுதிகளில் காயம் இருந்தது என்றும், துவரங்குறிச்சி சாலையும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாக சென்ற கார் தெற்கிலிருந்து வடக்காக வேலையை முடித்துவிட்டு எனது கணவர் இருசக்கரவாகனத்தில் சென்றபோது மோதி விபத்து ஏற்பட்டதாக தெரியவந்தது என்றும், விபத்து தொடர்பாக எனது கொழுந்தனார் இராசு புகார் அளித்தார் என்றும், விபத்தில் மேற்படி இருசக்கரவாகனத்தை ஓட்டி வந்த பட்டியல் சாட்சி 2 பழனிச்சாமி என்பவருக்கும் காயம் ஏற்பட்டது என்றும், அவருக்கு காலில் அடிப்பட்டது என்றும், அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னிட்டு மணப்பாறை அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணையின்போது துவரங்குறிச்சி போலீசாருடன் இருந்து எனது கணவரை அடையாளம் காட்டினேன் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.5. திரு. சண்முகம் தனது சாட்சியத்தில் நான் B.Ed வரை படித்துள்ளேன் என்றும், என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான் என்றும், மேற்படி ஆவணத்தில் என்னோடு கோபாலகிருஷ்ணன் கையெழுத்து செய்தார் என்றும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு விபத்து ஏற்பட்டது தொடர்பாக துவரங்குறிச்சி போலீசார், துவரங்குறிச்சி டெப்போ அருகே வந்து விசாரித்து விபத்து நடந்த இடத்தில் வரைபடம் தயார் செய்து அது தொடர்பாக மேற்படி என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கையொப்பம் பெற்றார்கள் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.6) அ.சா.6. திரு. கோபாலகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் என்னிடம்

காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான் என்றும், மேற்படி ஆவணத்தில் என்னோடு சண்முகம் கையெழுத்து செய்தார் என்றும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு விபத்து ஏற்பட்டது தொடர்பாக துவரங்குறிச்சி போலீசார், துவரங்குறிச்சி டெப்போ அருகே வந்து விசாரித்து விபத்து நடந்த இடத்தில் சரிபார்த்து அது தொடர்பாக எழுதி மேற்படி என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கையொப்பம் பெற்றார்கள் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.7) அ.சா.7. திரு. சண்முகசுந்தரம் (காவல் ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 12.04.2023 அன்று காலை 06.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லப்பா அவர்கள் துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது கள்ளக்காம்பட்டியை சேர்ந்த ராசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அந்த புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 84/2023 u/s.279, 337,304(A) IPC ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், தொடர்ந்து இவ்வழக்கை கோப்பை மேல் விசாரணைக்காக அவர் எனது பார்வைக்கு வைக்க நான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் சண்முகம், கோபாலகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார்செய்து மேற்படி பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று, அவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேலும் சாட்சிகள் ராசு, பழனிச்சாமி, சக்திவேல் உள்ளிட்ட சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், தொடர்ந்து இவ்வழக்கில் இறந்துபோன சந்திரன் என்பவர் வைக்கப்பட்டிருந்த மணப்பாறை அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக சாட்சிகள், பஞ்சாயத்தார்கள்

முன்னிலையில் காலை 10.00 மணியளவில் பிரேத விசாரணை மேற்கொண்டு இறந்தவரின் உடலை இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு தலைமை காவலர் ஜெகநாதன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துவர் மணிமுடி அவர்களிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனை முடித்து இறந்தவர் உடலை அவரது குடும்பத்தார்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது என்றும், தொடர்ந்து சாட்சிகள் முருகேஸ்வரி, ஜீவானந்தம், பழனிச்சாமி, ஜெகநாதன், காவல் உதவி ஆய்வாளர் செல்லப்பா உள்ளிட்டோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரியவந்ததால் அவரை 12.04.2023 அன்று நிலையம் ஆஜரான எதிரியை காரணம் வறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன் என்றும், தொடர்ந்து இவ்வழக்கில் தொடர்புடைய வாகனங்களான TN 65 AM 5602 என பதிவெண் கொண்ட காரையும், TN 59 K 2405 என்ற பதிவெண்ட கொண்ட Splendor இருசக்கரவாகனத்தை மோட்டார் வாகன தணிக்கைக்காக மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. சத்யா அவர்கள் வசம் 28.04.2023 ம் தேதியன்று ஒப்படைத்து வாகன தணிக்கை முடித்து அறிக்கைகள் பெற்றேன் என்றும், தொடர்ந்து அவரை விசாரித்து மேற்படி வாக்குமூலம் பதிவு செய்து விபத்து இயந்திரகோளறினால் நடைபெறவில்லை என்று சான்று வழங்கினார் என்றும், இவ்வழக்கில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் கலைச்செல்வி, ரவிவ்னா மற்றும் விக்னேஷ் ஆகியோர்களை விசாரித்து காயமடைந்த பழனிச்சாமிக்கு ஏற்பட்டகாயம் கொடுங்காயம் என வழங்கிய காயச்சான்றிதழை பெற்றேன் என்றும், மருத்துவர் மணிமுடி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் இறந்து போன சந்திரன் என்பவர் இறப்பு குறித்து வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றேன் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் சட்டப்பிரிவுகள் U/s.279,

337,304(A) IPC லிருந்து U/s.279, 338, 304(A) IPC ஆக சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றும், இவ்வாறாக புலன் விசாரணை முடித்து எதிரிக்குஎதிராக 14.08.2023 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>6. குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின் படியான நடவடிக்கை:-</u>**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான தோன்றிய விஷயங்கள் குறித்து குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின்படி கேள்விகள் கேட்க எதிரி தரப்பில் சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி வேறு ஏதாவது கூற வேண்டுமா என்று வினவிய போது பொய் வழக்கு என்றும், எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவிய போது சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். பின்பு எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை இல்லை என்று குறிப்புரை செய்ததன் பெயரில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை</u>:-**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் U/s.279, 338, 304(A) IPC-ன் கீழ் வனையப்பட்ட குற்றச் சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**<u>8. தீர்வு</u>:-**

(8.1). இந்த வழக்கில் எதிரி தரப்பில் எந்தவித சாட்சிகளும் ஆவணங்களும் முன்னிறுத்தப்படவில்லை. அரசு தரப்பில் உரிய வாய்ப்பு அளிக்கும் வாதங்கள் எதுவும் முன் வைக்கப்படவில்லை. கடந்த 29.06.2026-ம் தேதியன்று எதிரி தரப்பில் முன்வைத்த வாதங்கள் கேட்கப்பட்டது .

(8.2) இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் எதிரிக்கு எதிரான சங்கதிகள் குறித்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313-ன் கீழ் கேள்வி கேட்கும்போது எதிரி தன் மீது தவறில்லை எனவும், பொய்யான வழக்கு எனவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்துபோன சந்திரன் தனது உடலில் ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களின் விளைவுகளால்இறந்துள்ளார் என சான்று அளிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வாகனங்களின் ஆய்வு அறிக்கைகளில் இந்த விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகள் எதுவும் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே, அரசு தரப்பில் குறிப்பிட்ட நாள் குறிப்பிட்ட நேரத்தில் எதிரி ஓட்டி வந்த வாகனமும் இறந்துபோன சந்திரன் ஓட்டி வந்த வாகனமும் ஒன்றுக்கொன்று மோதி அந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால்தான் மேற்படி சந்திரன் என்பவருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளது என்ற தொடர்புபட்ட சங்கதி முதற்கட்டமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, தற்போது இந்த நீதிமன்றம் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியானது இந்த விபத்தானது எதிரியின் அதிவேகம், கவனக்குறைவு மற்றும் பின் விளைவுகளை எதிர் நோக்காமல் அசட்டையாக செயல்பட்டு இந்த விபத்துக்கு காரணமாக இருந்தாரா என்பதாகும்.

(8.3) மேலும் அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சுமார் மூன்று வருடத்திற்கு முன்பு சக்திவேல் என்பவர் எனக்கு போன் செய்து எனது தம்பி துவரங்குறிச்சி டிப்போ அருகில் விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது தம்பி சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். தகவல் அறிந்து சுமார் 10 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றும், மேலும் அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்தை ஏற்படுத்திய கார் வடக்கிலிருந்து தெற்கு

நோக்கி வந்தது என்றால் சரிதான். இறந்த நபரும், பழனிச்சாமியும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்வதற்கு தனிரோடும், வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்வதற்கும் தனிரோடும் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இரண்டு ரோடுகளுக்கு மத்தியில் குறுக்கே கட்டைச்சுவர் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் வண்டியில் செல்லும்போது நிறைய ட்ரம்ஸ் எடுத்துக்கொண்டு சென்றார்கள் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(8.4) அ.சா.2. பழனிச்சாமி தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் வேலை முடித்துவிட்டு நானும், சந்திரனும் இருசக்கர வாகனத்தில் திரும்பி வந்தோம். அந்த வாகனத்தை நான் ஓட்டி வந்தேன். சந்திரன் எனக்கு பின்னால் அமர்ந்து வந்தார். துவரங்குறிச்சி டிப்போ அருகில் வந்து கொண்டிருந்தபோது திருச்சி சாலையில் மேற்கு பக்கமாக திருச்சியை நோக்கி சென்று கொண்டிருந்தோம். அதே சாலையில் மதுரை நோக்கி வந்த கருப்பு கலர் கார் வேகமாகவும், கண்ட்ரோல் இல்லாமல் வந்து எங்களது வாகனத்தின்மீது மோதியது. என்னோடு வந்த சந்திரன் சம்பவ இடத்தில் இறந்து போய்விட்டார். எனக்கு வலது காலிலும், தலையிலும் ரத்தக்காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய நபரை தெரியவில்லை என்றும் சாட்சி சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இருசக்கர வாகனமும், காரும் எதிரெதிரே வந்தது என்றால் ஆமாம். இரண்டும் ஒரே ரோட்டில் எதிரெதிரே வந்தது என்றால் ஆமாம். நாங்கள் திருச்சி செல்லும் சாலையில் வந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். நான்தான் வண்டியை கவனக்குறைவாக ஓட்டி வந்து தவறான திசையில் வந்து கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(8.5) அ.சா.3. சக்திவேல் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சுமார் மூன்று வருடத்திற்கு முன்பு மதுரை – துவரங்குறிச்சி சாலையில் டிப்போ அருகில் நான் எக்ஸ்எல் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது அப்போது எங்களுக்கு எதிரே பழனிச்சாமி இருசக்கரத்தை ஓட்ட சந்திரன் என்பவர் பின்னால் அமர்ந்து வந்தார். அவரது இருசக்கர வாகனத்தில் ட்ரம்செட் மற்றும் டிரஸ் வைத்திருந்த பேக்கை வைத்திருந்தார்கள். இருசக்கர வாகனம் ரோட்டின் வெள்ளைக்கோட்டை தாண்டியபோது தெற்கிலிருந்து வடக்காக வந்துகொண்டிருந்தபோது அந்த கார் வடபுறத்தில் இருந்து தெற்கு புறமாக வந்த கார் வேகமாக வந்து மோதியது. இது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த சந்திரன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த பழனிச்சாமி பறந்து கீழே விழுந்தார். அவருக்கு காலில் ரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது என்றும் சாட்சியம் அளித்தார். மேலும் அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வண்டியில் இருந்த இருநபர்களும் மதுபோதையில் இருந்தார்கள் என்றால் சரிதான். மது வாடை அடித்தது. இந்த விபத்திற்கு யார் காரணம் என்றால் இருவரும் காரணம். சம்பவ இடத்தில் ரோடானது சம்பவ இடத்தில் மதுரை செல்லும் ரோட்டிற்கும். திருச்சி செல்லும் ரோட்டிற்கும் தனித்தனி சாலைகள் உள்ளது என்றாலும் நடுவில் குறுக்குச் சுவர் உள்ளதா என்றால் உள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் ஒரு கிலோ மீட்டர் குறுக்கு ரோடு இருப்பதால் எதிர்திசையில் பயணம் செய்து ரோட்டை கடப்பது வழக்கம் என்றால் சரிதான். அப்படி ரோட்டை கடக்கும்போதுதான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். பைக்கில் பெரிய பை, பெரிய டிரம், 3 சின்ன ட்ரம் ஆகியவைகள் இருந்ததும் விபத்துக்கான காரணம் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(8.6) சண்முகசுந்தரம் காவல் ஆய்வாளர் தனது குறுக்கு விசாரணை

சாட்சியத்தில் பழனிச்சாமி என்பவரின் விபத்து பதிவேட்டில் இருசக்கர வாகனத்தில் பில்லியன் ரைடராக பயணம் செய்யும்போது விபத்து நடந்ததாகவும், அந்த இருசக்கர வாகனத்தை இறந்துபோன சந்திரன் ஓட்டி வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தில் ஓட்டுநராக இறந்துபோன சந்திரன் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன சந்திரன் என்பவர் ஹெல்மெட் அணியவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரருக்கு யார் தகவல் கொடுத்தார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் வடக்கிலிருந்து தெற்காக திருச்சி – மதுரை சாலையும், தெற்கிலிருந்து வடக்காக மதுரை – திருச்சி சாலையும் உள்ளது என்றால் சரிதான். இந்த இரு ரோடுகளுக்கும் குறுக்கே டிவைடர் உள்ளது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். சம்பவ சமயம் கிழக்கிலிருந்து மேற்க்காக இருசக்கர வாகனம் செல்லும்போதுதான் விபத்து நடந்தது என்றால் சரிதான். திருச்சி – மதுரை சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பயணம் செய்யக்கூடாது என்றால் சரிதான். ஆனால் இருசக்கர வாகனம் மேற்படி பயணம் செய்துள்ளது என்றார் சரியல்ல. மது போதையில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் கவனக்குறைவாக சாலை விதிகளுக்கு புறம்பாக இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி வந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9. மேலே கண்ட சாட்சியத்தின் வாயிலாக இருசக்கர வாகனத்தினை யார் ஓட்டி வந்தார்கள் என தெளிவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், சம்பவத்தின்போது இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்தவர் ஹெல்மெட் அணியவில்லை என்பதும், சாலை விதிகளை பின்பற்றாமல் இரு சக்கர

வாகனத்தினை இயக்கி வந்துள்ளார் என்பதும், சரியான திசையில் இருசக்கர வாகனத்தை இயக்காமல் எதிர் திசையில் இயக்கி உள்ளார் என்பதும் தெரிய வருகின்றது.

10. மேலும், இந்த விபத்தினை நேரில் பார்த்த சாட்சியாக பட்டியலிடப்பட்டு அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட இரண்டு சாட்சிகளும் இந்த வழக்கு சம்பவம் எவ்வாறு யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்பதை நேரில் பார்த்ததாக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அவர்களது சாட்சியத்தில் இருசக்கர வாகனமும், காரும் எதிர் எதிரே வந்தது என்றும் இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்தவர்கள் பெரிய டிரம், 3 சின்ன மேளம், பெரிய பை அடங்கிய பையை வைத்துதான் வண்டியில் வந்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள் மேலும் இருசக்கர வாகனத்தில் இருந்த இரு நபர்களும் மது போதையில் இருந்தார்கள் என்றால் சரிதான். மது வாடை அடித்தது என்றும், எதிர் திசையில் பயணம் செய்து இருப்பதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். பைக்கில் பெரிய பைகள் ஆகியவைகள் இருந்ததும் விபத்திற்கு காரணம் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, அவர்களின் சாட்சியத்தின் வாயிலாகவே இந்த விபத்திற்கு இருசக்கர வாகனத்தினை இயக்கிய நபர் மது போதையிலும் பாரம் ஏற்றிக்கொண்டும் சாலை விதிகளை சரிவர பின்பற்றாமல் எதிர் திசையில் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாக சென்றதாலேயே விபத்து ஏற்பட்டதாக மேற்கண்ட சாட்சியத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. மேலும் எதிரியால்தான் விபத்து ஏற்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் எந்தவித சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. வழக்கு சூழ்நிலைகளும் இந்த விபத்து எதிரியின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதை எடுத்துக்காட்டும் விதமாக அமையவில்லை. மாறாக இருசக்கர வாகனத்தினை எதிர்திசையில் ஓட்டி வந்த

நபரால்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என இந்த நீதிமன்றம் கருதுகிறது. இந்த சூழ்நிலையில் இரண்டாம் நிலை சாட்சியான பார்வை மகஜர் சாட்சி மற்றும் புலன் விசாரணை மேற்கொண்ட காவல்துறை சாட்சிகள் ஆகியவற்றை பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என இந்த நீதிமன்றம் கருதுகின்றது.

State of Maarashtra (VS) Prithviraj Daulati Deokar

Criminal Appeal No 609 of 1999.

சாட்சிகளின் வாக்குமூலங்களிலும், விபத்தின் காரணம் எதிரே வந்த மோட்டார் சைக்கிளின் வேகமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகம் இருந்தது.

எனவே, குற்றவாளியை விடுதலை செய்தது செல்லும்.

Devaraj (VS) St of TN.

Crl.RC.(MD) No.60 of 2019 தீர்ப்பு நாள் 20.06.2023

Boopathi (VS) State (2005)

State of Gujarat (VS) Bhimabhai Kancharabhai

குற்றவியல் வழக்கில் அரசு தரப்பு விபத்து குற்றம் சாட்டப்பட்டவரின் அலட்சியத்தால் மட்டுமே ஏற்பட்டது என்பதை நிரூபிக்க தவறினால் தண்டனை நிலைக்கத்தக்கது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. எதிர் திசையில் வந்த வாகன ஓட்டுநரின் பங்களிப்பு இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் இருந்தால் தண்டனை வழங்க முடியாது.

Jagdish Chander (VS) State of Delhi

Sec 304 A IPC ன் கீழ் குற்றத்தை நிரூபிக்க வெறும் விபத்து நடந்தது மட்டும் போதாது அலட்சியம், அஜாக்கிரதை, கவனக்குறைவு ஆகியன உறுதியான ஆதாரங்கள் கொண்டு நிரூபிக்கப்பட வேண்டும். மேலேகண்ட முன் தீர்ப்புகள் இந்த வழக்கிற்கு பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

11. ஆகவே. மேற்கண்ட முன்தீர்ப்புகளின் அடிப்படையிலும் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட தனிப்பட்ட முதல் நிலை சாட்சியங்கள் யாரும் இந்த வழக்கு சம்பவம் எதிரியின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்ற அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாக சாட்சியம் அளிக்காத காரணத்தாலும் சூழ்நிலை சாட்சியங்களும் இல்லாத நிலையில் புலன்விசாரணை தொடர்பான சாட்சியங்கள் அரசு தரப்பிற்கு எந்த விதத்திலும் பயனளிக்கப்போவது இல்லை என இந்த நீதிமன்றம் கருதுவதாலும் மேற்படி உண்மையில் சம்பவம் நடக்கும்போது சம்பவ இடத்திலிருந்து சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளை காவல்துறையினர் விசாரணை செய்திருந்தால் அந்த நபர்கள் இந்த விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதை தெளிவாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்து இருப்பார்கள் என இந்த நீதிமன்றம் கருதுவதாலும், இந்த வழக்கில் கடந்த 11.04.2023–ம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் திருச்சி – மதுரை எந்த ரோட்டில் துவரங்குறிச்சி அரசு பஸ் ஸ்டாப் அருகில் உள்ள பிரிவு சாலை அருகில் பழனிச்சாமி என்பவர் ஒட்டிய TN 59 K 2405 என்ற பதிவு எண்கொண்ட Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் வழக்கின் வாதி ராசுவின் தம்பி சந்திரன் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு திருச்சி – மதுரை NH ரோட்டில் கிழக்கு பக்கம் இருந்து மேற்கு பக்கம் மதுரை – திருச்சி ரோட்டிற்கு செல்வதற்காக கடந்தபோது திருச்சி – மதுரை NH ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த TN 65 AM 5602 என்ற பதிவெண்கொண்ட Kia Sonet காரை ஓட்டி வந்த வழக்கின் எதிரி சந்தீப் என்பவர் இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அந்த விபத்தின் காரணமாக சந்திரன் என்பவர் இறந்துபோக காரணமாக இருந்து இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304(A) ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றச்செயல்கள் செய்துள்ளார் என அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமின்றி

நிரூபணம் செய்யவில்லை என தீர்மானித்து, இந்த வழக்கில் தீர்வளிக்க வேண்டிய எழுவினாவிற்கு அரசு தரப்பிற்கு எதிராக இந்த நீதிமன்றம் விடை அளிக்கிறது.

**முடிவாக இந்த வழக்கில் எதிரி சந்திப் என்பவர் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் U/s. 279, 338, 304(A) ஆகியவற்றின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து இந்த நீதிமன்றம் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 255 (1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. மேலும் எதிரிக்கு பிணையாளர்கள் வழங்கிய பிணை பத்திரத்தை ரத்து செய்யவும் இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.**

12. இந்த வழக்கில் இரு தரப்பிலும் சான்று பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, அது குறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09 நாள் அவை அறிய பகரப்பட்டது.

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.07.09 15:12:23 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1. | : | திரு. இராசு |
| அ.சா.2. | : | திரு. பழனிச்சாமி |
| அ.சா.3 | : | திரு.சக்திவேல் |
| அ.சா.4 | : | திருமதி. முருகேஸ்வரி |
| அ.சா.5 | : | திரு. சண்முகம் |
| அ.சா.6 | : | திரு. கோபாலகிருஷ்ணன் |
| அ.சா.7 | : | திரு. சண்முகசுந்தரம் (காவல் ஆய்வாளர்) |

<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | : | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2. | : | பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து (திரு. சண்முகம்) |
| அ.சா.ஆ.3. | : | பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து (திரு. கோபாலகிருஷ்ணன்) |
| அ.சா.ஆ.4 | : | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | : | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | : | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | : | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | : | TN 65 AM 5602 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் வாகன தணிக்கை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | : | TN 59 K 2405 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் வாகன தணிக்கை அறிக்கை |
| அ.சா.ஆ.10 | : | மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் டாக்டர். கலைச்செல்வி என்பவர் பழனிச்சாமி என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.11 | : | மணப்பாறை அரசு மருத்துவமனையில் டாக்டர். R. விக்னேஷ் என்பவர் பழனிச்சாமி என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.12 | : | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.13 | : | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

<u>அரசு தரப்பில் சான்று பொருட்கள்</u>: இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை</u>

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.07.09 15:12:15 +0530

நீதித்துறை நடுவர்

மணப்பாறை.

<u>பின்குறிப்பு:–</u>

1) வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2) எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.